### ஆறு சட்டமன்றத் தொகுதிகளில்

# 'தமிழ்நாடு தலைகுனியாது' - முதல் நாள் பரப்புரை!

## மக்கள் தன்னெழுச்சியாகத் திரண்டனர்!













**சென்னை, பிப். 3-**

**கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின் பேரில் 'திராவிட மாடல்' அரசின் சாதனைகளையும், ஒன்றிய பா.ஜ.க. மற்றும் அடிமை NDA கூட்டணி தமிழ்நாட்டுக்கு இழைத்து வரும் அநீதிகளையும் மக்கள் முன்பு எடுத்துரைக்கும் விதமாக 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் "தமிழ்நாடு தலைகுனியாது" பரப்புரையானது 01.02.2026 முதல் தொடங்கப்பட்டுள்ளது. 23 கழக நட்சத்திரப் பேச்சாளர்கள் பிப்ரவரி 28 ஆம் தேதி வரை தமிழ்நாடு முழுக்க சுற்றுப் பயணம் செய்து பரப்புரை மேற்கொள்கின்றனர்.**

'தமிழ்நாடு தலைகுனியாது' பரப்புரையின் துவக்க நாளான 01.02.2026 அன்று ஆறு சட்டமன்றத் தொகுதிகளில் மிக சிறப்பான முறையில் பரப்புரை நடைபெற்றது.

திருவள்ளூரில் இனிகோ இருதயராஜ், இராயபுரத்தில் திண்டுக்கல் ஐ.லியோனி, திருப்போரூரில் சபாபதி மோகன், நிலக்கோட்டையில் பொன்.முத்துராமலிங்கம், கிருஷ்ணராயபுரத்தில் ஏ.கே.எஸ்.விஜயன், ஊத்தங்கரையில் ஆர்.எஸ்.பாரதி என ஆறு தொகுதிகளிலும் கழக நட்சத்திரப் பரப்புரையாளர்கள் கலந்து கொண்டனர்.

மகளிர் உரிமைத்தொகை, விடியல் கட்டணமில்லா பேருந்துப் பயணம், புதுமைப் பெண் திட்டம், காலை உணவுத் திட்டம், நான் முதல்வன் திட்டம் என 'திராவிட மாடல்' அரசின் சாதனைத் திட்டங்களை மக்கள் முன் எடுத்து வைத்ததோடு, கடந்த பத்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியால் பாழ்படுத்தப்பட்ட தமிழ்நாட்டை மீட்டு இன்று இந்தியாவிலேயே No.1 மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்திக் காட்டியுள்ள 'திராவிட மாடல்' அரசின் சாதனைகளும் விளக்கிக் கூறப்பட்டது.

அதோடு தமிழ்நாட்டுக்கான நிதிப் பகிர்வு குறைப்பு, கல்வி நிதி ரூ.3,458 கோடி, 100 நாள் வேலை திட்ட நிதி சுமார் ரூ.2000 கோடி, குடிநீர் இணைப்பு நிதி ரூ.3000 கோடி, பேரிடர் நிதி உள்ளிட்ட எந்த ஒரு நிதியையும் முறையாக விடுவிக்காமல் பொருளாதார ரீதியாக ஒன்றிய அரசு மேற்கொள்ளும் அடக்குமுறை, மூத்தகுடி நாகரிகமான தமிழரின் பண்பாட்டை பறைசாற்றும் கீழடி அகழ்வாய்வு முடிவை ஏற்க மறுப்பது, தமிழ்மொழியை அழிக்கும் வகையில் இந்தித் திணிப்பு முயற்சி, நமது அரசியல் உரிமைகளை குறைத்து நமது குரல்வளையை நசுக்கும் வகையிலான தொகுதி மறு சீரமைப்பு உள்ளிட்ட ஒன்றிய பா.ஜ.க. அரசின் வஞ்சக சூழ்ச்சியையும், அதற்கு துணைபோகும் அ.தி.மு.க.வின் துரோகங்களும் மக்கள் முன் தோலுரித்துக் காட்டப்பட்டது.

'திராவிட மாடல்' அரசு தொடர்ந்தால் மட்டுமே மக்களுக்கான நலத்திட்டங்கள் தொடரும்; அமைதி நீடிக்கும். தமிழ்நாட்டில் வன்முறையை தூண்டி, வளர்ச்சியைத் தடுக்கத் துடிக்கும் டெல்லி டப்பா கூட்டணி செய்யும் சதி வேலைகள் எதுவும் இங்கு எடுபடாது என பரப்புரை மேற்கொள்ளப்பட்டது.

டெல்லியின் முன் என்றும் 'தமிழ்நாடு தலைகுனியாது' என இப்பரப்புரையில் உரக்கச் சொல்லப்பட்டது. இந்தப் பரப்புரைக்கு எதிர்பார்ப்பை விட மிகப்பெரிய அளவிலான வரவேற்பை அளித்துள்ளனர் தமிழ்நாட்டு மக்கள். ஆறு தொகுதிகளிலும் மக்கள் திரண்டு பங்கேற்றனர்.

அந்தந்த தொகுதியின் முக்கிய பிரபலங்கள், தொழிற் சங்கப் பிரதிநிதிகள், தொழில் முனைவோர், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், வணிகர்கள், அரசு திட்டங்களால் பயன்பெற்ற மக்கள், இளைஞர்கள், பெண்கள் என அனைத்துத் தரப்பு மக்களும் இப்பரப்புரையில் தன்னெழுச்சியாக வந்து கலந்து கொண்டனர்.